(ஒன்பதாவது பாராளுமன்றம் - ஐந்தாவது கூட்டத்தொடர்)

இல. 1(9).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2024 மே 14 செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2024 மே 22, புதன்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் பிரதேசத்தில் “பிரத்தியேக புடவை தயாரித்தல் வலயம்” தொடர்பில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 மார்ச் 28 ஆம் திகதிய 2377/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.05.14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்,— பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் 4(அ) மற்றும் 16(4) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 48 ஆம் பிரிவின் கீழ் மற்றும் 2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் 13(3)ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 48 ஆம் பிரிவின் கீழ் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2024 மார்ச் 05 ஆம் திகதிய 2374/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.05.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2024 யூன் 04, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2024, யூன் 04, செவ்வாய்க்கிழமை)**

2094/2024

கௌரவ நிரோஷன் பெரேரா,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வென்னப்புவ, சிங்கக்குளிய தேவாலயத்தின் பொதுச்சபையானது, நிர்வாகிகளுக்கான தேர்தலை நடாத்துவதற்காக 2024.02.25 ஆம் திகதி கூட்டப்பட்டிருந்ததோடு, பின்னர் குறித்த பொதுச் சபை கூட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி பொதுச் சபை கூட்டத்தை இரத்துச் செய்வதற்கு நீதிமன்றம் கட்டளை பிறப்பித்திருந்ததா என்பதையும்;

(iii) குறித்த பொதுச் சபை கூட்டத்தை இரத்துச் செய்யுமாறு அறிவித்து பௌத்த அலுவல்கள் ஆணையாளர் அல்லது வேறு அலுவலரால் கடிதமொன்று விநியோகிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், குறித்த கடிதத்தைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சந்தாப் பணம் அறவிட்டு சிங்கக்குளிய தேவாலயத்திற்கு அங்கத்தவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) பொதுச் சபை கூட்டத்தை இரத்துச் செய்தமைக்கு எதிராக மேற்படி தேவாலயத்தின் அங்கத்தவர்களால் எதிர்ப்புகள் முன்வைக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், பொதுச் சபை கூட்டத்தை இரத்துச் செய்ததன் மூலம் மேற்படி தேவாலயத்தின் அங்கத்தவர்களது மனித உரிமைகளை உள்ளிட்ட உரிமைகள் மீறப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அதனை சீர்செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2024 யூன் 18, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

3/2024

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஒவ்வொரு வருடமும் அதிக வறட்சியான காலநிலை நிலவும் காலப்பகுதிகளில் கண்டி, பன்வில மற்றும் உடுதும்பரை பிரதேச செயலக ஆளுகைப் பிரதேசங்கள் உட்பட மத்திய மலைநாட்டின் பல பிரதேசங்களிலுள்ள ஒதுக்குக் காடுகளையும் நீரேந்துப் பிரதேசங்களையும் சார்ந்த காடுகளும் சிறிய பற்றைக் காடுகளும் தீ வைக்கப்படுகின்றன என்பதையும்;

(ii) அதன் காரணமாக நீர் ஊற்றுக்கள் வற்றிப்போதல், மழை காலங்களில் மலை உச்சிகளிலுள்ள கற்கள் புரளுதல் மற்றும் மண்சரிவுகள் ஏற்படுதல் போன்ற சேதங்கள் ஏற்படுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி தீ வைப்புகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) வெப்பமான காலநிலையுடன் வேகமாகப் பரவும் தீயை கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) உணர்திறன் வாய்ந்த சூழல் தொகுதியைப் பாதுகாப்பதற்காக நிலைபேறான தீர்வு வழங்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்தீர்வு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

41/2024

கௌரவ புத்திக பத்திறண,— நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையில் 1948.02.04 ஆம் திகதியின் பின்னர் மரண தண்டனை விதிக்கப்பட்டதையடுத்து தூக்கிலிடப்பட்டு கொல்லப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தூக்கிலிடப்பட்டு கொல்லப்பட்ட ஆட்களின் மரணச் சான்றிதழ்களை உறவினர்களிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) முன்னாள் பிரதம அமைச்சர் கௌரவ எஸ்.டப்ளியூ.ஆர்.டி. பண்டாரநாயக்க அவர்களை படுகொலை செய்தமை தொடர்பில் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்ட தல்துவே சோமாராம தேரரின் மரணச் சான்றிதழ் இதுவரையிலும் வழங்கப்படவில்லை என்பதையும்;

(ii) 1962.07.06 ஆம் திகதி தல்துவே சோமாராம தேரர் தூக்கிலிடப்பட்டு கொல்லப்பட்டதாக குறிப்பிடப்பட்டாலும், அத்திகதியில் அப்பெயரில் மரணமொன்று பதிவு செய்யப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) தல்துவே சோமாராம தேரரின் மரணச் சான்றிதழ் வழங்கப்படாமை தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் தீர்மானம் யாதென்பதையும்;

(iii) இன்றேல், விசாரணையொன்று மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதன் பின்னர் மரணச் சான்றிதழ்கள் வழங்கப்படாத வேறு நபர்களும் உள்ளனரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

311/2024

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இரத்தினபுரி, குருவிட்ட, போபத் எல்ல நீர்வீழ்ச்சியைப் பார்வையிட வருகைதரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடமிருந்து பணம் அறவிடப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அப்பணத்தை அறவிடும் நிறுவனம் யாதென்பதையும்;

(iii) அதனூடாக மேற்படி நிறுவனம் ஈட்டும் வருடாந்த வருமானம் எவ்வளவு என்பதையும்;

(iv) அவ்வருமானத்தைப் பயன்படுத்தி நீர்வீழ்ச்சியைப் பார்வையிட வருகைதரும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) நீர்வீழ்ச்சியைப் பார்வையிட வருகைதரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சிறுவர்களிடமிருந்து அறவிடப்படும் பணம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

358/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2023.10.30 ஆம் திகதியளவில் இலங்கையில் ஊனமுற்ற ஆட்களின் எண்ணிக்கையானது 5-10, 10-15, 15-20, 20-30, 30-40 வயதுக்கு இடைப்பட்ட மற்றும் 40 இற்கு மேற்பட்ட எனும் ஒவ்வொரு வயதுப் பிரிவு, பாலினம், ஊனம் மற்றும் மாவட்டத்தின் அடிப்படையிலும்;

(ii) 5-20 வயதுக்கு இடைப்பட்ட ஊனமுற்றவர்களில் ஆரம்ப, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி பெறுவோரின் எண்ணிக்கை மற்றும் கல்வி பெறாதவர்களின் எண்ணிக்கை பாலின அடிப்படையிலும்;

(iii) 20 வயதுக்கு மேற்படட ஊனமுற்றவர்களில், அரசதுறை, தனியார் துறை மற்றும் சுயதொழில்வாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை பாலின அடிப்படையிலும்;

தனித்தனியே யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேலே (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கை, ஒட்டுமொத்த ஊனமுற்ற ஆட்களின் எண்ணிக்கையின் வீதாசாரமாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

368/2024

கௌரவ கயந்த கருணாதிலக்க,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2015 தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை, இலங்கையில் இரட்டைப் பிரசாவுரிமை பெறுவதற்காக விண்ணப்பித்த நபர்களின் எண்ணிக்கை ஒவ்வோர் ஆண்டுவாரியாக தனித்தனியாக யாது என்பதையும்;

(ii) அவர்களில், இரட்டைப் பிரசாவுரிமை வழங்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை ஒவ்வோர் ஆண்டுவாரியாக தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) இரட்டைப் பிரசாவுரிமை பெறுவதற்கு விண்ணப்பித்த திகதியிலிருந்து அதனை வழங்குதல் வரையான செயன்முறைக்கு நிர்ணயிக்கப்பட்ட ஒரு காலப்பகுதி உண்டா என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

371/2024

கௌரவ நிரோஷன் பெரேரா,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை அரசாங்கம், லஸாட் - பிரான்ஸ் கம்பனியிடம் (M/S Lazards-France) நிதி ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) குறித்த உடன்படிக்கைக்கு அமைவாக மேற்படி கம்பனியின் அடிப்படை பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி உடன்படிக்கைக்கு அமைவாக இலங்கை அரசாங்கம் செலுத்த வேண்டிய பணத்தொகையும் இன்றளவில் செலுத்தியுள்ள பணத்தொகையும் இலங்கை ரூபா மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர்களின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை அரசாங்கம் கிளிபர்ட் சான்ஸ் (M/S Clifford Chance LLP) கம்பனியிடம் சட்ட ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) குறித்த உடன்படிக்கைக்கு அமைவாக மேற்படி கம்பனியின் அடிப்படை பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி உடன்படிக்கைக்கு அமைவாக இலங்கை அரசாங்கம் செலுத்த வேண்டிய பணத்தொகையும் இன்றளவில் செலுத்தியுள்ள பணத்தொகையும் இலங்கை ரூபா மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர்களின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

380/2024

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவுக் கட்டளை விடுக்கப்படுகின்ற எரிபொருள், தரையிறக்கப்படும் இடங்களும் தரையிறக்கப்படும் முறையும் தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) குழாய்கள் மூலமாக தரையிறக்கப்படுமாயின், அதற்காகப் பயன்படுத்தப்படும் குழாய்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி குழாய்த் தொகுதி செயலிழந்து அல்லது அடைப்புகளைக் கொண்டதாக இருக்குமாயின் அதனை நவீனமயப்படுத்துவதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், மதிப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும்;

(v) குழாய்த் தொகுதியில் கோளாறுகள் உள்ள சந்தர்ப்பமொன்றில் எரிபொருளை கப்பலிலிருந்து தரையிறக்குவதற்காக எடுக்கப்படும் நாட்களின் எண்ணிக்கையும் குழாய்த் தொகுதி சிறப்பாக செயற்படும் சந்தர்ப்பமொன்றில் எரிபொருளை கப்பலிலிருந்து தரையிறக்குவதற்காக எடுக்கப்படும் நாட்களின் எண்ணிக்கையும் தனித்தனியாக எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை சாதாரணமாக கொள்வனவுக் கட்டளை விடுக்கும் எரிபொருள் கப்பல்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) எரிபொருள் கப்பல் ஒன்றுக்கு தாமதக் கட்டணமாக ஒரு நாளைக்குச் செலுத்த வேண்டிய தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1244/2024

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலநிலை சூட்டிகை நீர்ப்பாசன கமத்தொழில் கருத்திட்டம் (CSIAP) என்ற பெயரில் கருத்திட்டமொன்று மொனராகலை மாவட்டத்தில் அமுலில் உள்ளது என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், மேற்படி கருத்திட்டம் அமுல்படுத்தப்படுகின்ற பிரதேச செயலாளர் பிரிவுகள், மேற்படி ஒவ்வொரு பிரிவிலும் அக்கருத்திட்டம் அமுல்படுத்தப் படுகின்ற காலஎல்லை, கமத்தொழில் கருத்திட்டங்கள் மற்றும் நீர்ப்பாசனக் கருத்திட்டங்கள் என்ற வகையில் மேற்படி ஒவ்வொரு பிரிவுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள தொகை என்பன வெவ்வேறாக யாவை;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் இதுவரை அமுல்படுத்தி நிறைவு செய்யப்பட்டுள்ள கமத்தொழில் கருத்திட்டங்களின் வகைகளும் நீர்ப்பாசன கருத்திட்டங்களின் வகைகளும் வெவ்வேறாக யாவை;

(iv) தற்போது அமுலில் உள்ள கமத்தொழில் கருத்திட்டங்களின் வகைகள் மற்றும் நீர்ப்பாசனக் கருத்திட்டங்களின் வகைகள், மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தினதும் தற்போதைய முன்னேற்றம் மற்றும் மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தையும் நிறைவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி என்பன வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

2111/2024

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கை அரசாங்கத்தினால் விநியோகிக்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட 14 அரசாங்கப் பிணையக் கொள்வனவு நிறுவனங்களால் (பிரைமரி டீலர்ஸ்) 2022.06.30 இல் முடிவடைந்த காலப்பகுதியில் ஈட்டப்பட்ட மூலதன இலாபங்களை வெவ்வேறாகவும்;

(ii) இலங்கை அரசாங்கத்தினால் விநியோகிக்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் தொடர்பில் இதே பிணையக் கொள்வனவு நிறுவனங்களால் 2023.06.30 இல் முடிவடைந்த காலப்பகுதியில் ஈட்டப்பட்ட மூலதன இலாபங்களை வெவ்வேறாகவும்;

(iii) 2022.06.30 இல் முடிவடைந்த காலப்பகுதியில் இந்தப் பிணையக் கொள்வனவு நிறுவனங்களால் ஈட்டப்பட்ட மொத்த மூலதன இலாபங்களையும்;

(iv) 2023.06.30 இல் முடிவடைந்த காலப்பகுதியில் இந்தப் பிணையக் கொள்வனவு நிறுவனங்களால் ஈட்டப்பட்ட மொத்த மூலதன இலாபங்களையும்;

அவர் இச்சபைக்கு வெவ்வேறாக அறியத் தருவாரா?

(ஆ) (i) 2023.06.30 இல் முடிவடைந்த காலப்பகுதியில் இந்தப் பிணையக் கொள்வனவு நிறுவனங்களால் ஈட்டப்பட்ட மூலதன இலாபங்களில் கணிசமான அதிகரிப்பு இருந்ததா என்பதையும் அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா;

(ii) அவ்வாறெனின், அதற்கான காரணங்களையும்;

(iii) இவ்வாறு எதிர்பாராது ஈட்டப்பட்ட பெரும் இலாபத்திற்காக இந்தப் பிணையக் கொள்வனவாளர்களால் செலுத்தப்பட்ட வரித் தொகையினை வெவ்வேறாகவும்;

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2131/2024

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) தெஹிவளை-கல்கிசை மாநகர சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய 540-பீ ஜயதிலக்க கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள விஜேசேகர மாவத்தை/ வீதி என்ற பாதையின் கட்டிட எல்லையானது மேற்படி மாநகர சபையின் 2007 - 2020 ஆம் ஆண்டுகளுக்கான அபிவிருத்தித் திட்டத்தின் படி வீதியின் மத்தியிலிருந்து 20 அடிகளாக காணப்பட்ட போதிலும் 2020 - 2031 ஆம் ஆண்டுகளுக்கான அபிவிருத்தித் திட்டத்தின் படி மேற்குறித்த எல்லையானது 10 அடிகளாக குறைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், 2020 - 2031 ஆம் ஆண்டுகளுக்கான அபிவிருத்தித் திட்டத்தில் மேற்குறித்த வீதியின் கட்டிட எல்லையை வீதியின் மத்தியிலிருந்து 10 அடிகளாக குறைத்தமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iii) 2020 - 2031 ஆம் ஆண்டுகளுக்கான அபிவிருத்தித் திட்டத்தின் படி தெஹிவளை-கல்கிசை மாநகர சபை பிரதேசத்திற்குரிய வேறு வீதிகளின் கட்டிட எல்லைகளை முன்பிருந்ததைப் போன்றே வீதியின் மத்தியிலிருந்து 20 அடிகளாகவே பேணிச் செல்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி வீதியினதும் கட்டிட எல்லையை வீதியின் மத்தியிலிருந்து 20 அடிகளாக தொடர்ந்தும் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) மேற்படி வீதியின் இருமருங்கிலும் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்கள், நகர அபிவிருத்தி அதிகார சபையின் சட்ட விதிகளுக்கு இசைவானதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2024 யூன் 19, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

466/2024

கௌரவ அஜித் மான்னப்பெரும,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) மேல் மாகாணத்தில், ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்தினாலும் கழிவுகள் அகற்றப்படுகின்ற இடங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) தற்போது மேல் மாகாணத்தில் பாரியளவில் கழிவுகள் சேகரிக்கப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கை மற்றும் அவை அமைந்துள்ள இடங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி இடங்களை அண்டியதாக வாழும் மக்களுக்கு பல்வேறு சுற்றாடல்சார் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) மேற்படி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

511/2024

கௌரவ ரோஹண பண்டார,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில், மதவாச்சி வர்த்தக அங்காடியின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி வர்த்தக அங்காடியை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட தொகை யாதென்பதையும்;

(iii) மேற்படி வர்த்தக அங்காடியை துரிதமாக திறந்து வைப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

542/2024

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கிளைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி பணியகத்தின் கீழுள்ள பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி பயிற்சி நிலையங்களால் நடத்தப்படுகின்ற கற்கைநெறிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2020 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை வெளிநாடு சென்றுள்ள பயிற்சி பெற்ற மற்றும் பயிற்சி பெறாத தொழிலாளர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்திற்கமைவாக தனித்தனியே த்தனையென்பதையும்;

(ii) இன்றளவில் பயிற்சி பெற்ற / பயிற்சி பெறாத தொழிலாளர்களைக் கோரியுள்ள நாடுகள் மற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

565/2024

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி யாதென்பதையும்;

(ii) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பணியாற்றும் அத் திணைக்களத்திற்குரிய ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் இணைந்த சேவைக்குரிய ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(iii) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குரிய நிறைவேற்றுத் தரத்திலுள்ள அலுவலர்களுக்கும், நிறைவேற்றுத் தரத்திலல்லாத அலுவலர்களுக்கும், கனிஷ்ட ஊழியர்களுக்கும் செலுத்தப்படுகின்ற மாதாந்தச் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் ஒவ்வொரு பதவிக்கும் அமைவாக தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) இணைந்த சேவைக்குரிய நிறைவேற்றுத் தரத்திலுள்ள அலுவலர்களுக்கும், நிறைவேற்றுத் தரத்திலல்லாத அலுவலர்களுக்கும், கனிஷ்ட ஊழியர்களுக்கும் செலுத்தப்படுகின்ற மாதாந்தச் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் ஒவ்வொரு பதவிக்கும் அமைவாக தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

590/2024

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு பறவைகளை இறக்குமதி செய்ய அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளதா;

(ii) அவ்வாறாயின், பறவைகளை இறக்குமதி செய்ய அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள நாடுகள் யாவை;

(iii) அத்தகைய அங்கீகாரத்தை அளிக்கும்போது, பறவைக் காய்ச்சலுடன் சம்பந்தப்பட்ட அளவுகோல்கள் கவனத்தில்கொள்ளப்பட்டுள்ளனவா;

(iv) அதற்கான அங்கீகாரத்தை அளிக்கும்போது, கவனத்தில்கொள்ளப்பட்ட ஏனைய அளவுகோல்கள் யாவை;

(v) இறக்குமதி செய்யப்படுகின்ற பறவைகளிலிருந்து பறவைக் காய்ச்சல் பரவும் ஆபத்து காணப்படுமாயின், அதன் நிமித்தம் கடைப்பிடிக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

611/2024

கௌரவ ஜயந்த சமரவீர,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய சனாதிபதி, சனாதிபதியாக பதவி ஏற்ற திகதி தொடக்கம் இதுவரை மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு விஜயத்தின்போதும் சந்தித்த அரச தலைவர்கள் தனித்தனியே யாரென்பதையும்;

(iii) மேற்படி அரச தலைவர்களுடன் இராஜதந்திர ஒப்பந்தங்கள் எட்டப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அவ்வொப்பந்தங்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு வெளிநாட்டு விஜயத்தின்போதும் சனாதிபதியுடன் கலந்துகொண்டுள்ள ஏனைய பிரதிநிதிகளின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு வெளிநாட்டு விஜயத்திற்காகவும் செலவிடப்பட்ட தொகை தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

636/2024

கௌரவ பீ.வை.ஜீ.ரத்னசேக்கர,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2023 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் தலையீட்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக இலங்கைத் தொழிலாளர்கள் அனுப்பப்பட்டுள்ள நாடுகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நாடுகளுக்கும் அனுப்பப்பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(iii) 2023 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் தலையீடின்றி வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக சென்றுள்ள இலங்கைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி ஆண்டில் வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கைத் தொழிலாளர்களால் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ள மொத்த அந்நியச் செலாவணி எவ்வளவு என்பதையும்;

(v) எதிர்காலத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக இலங்கையைச் சேர்ந்த பயிற்சிபெற்ற தொழிலாளர்களை அனுப்புவதற்கு தயாரிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1092/2024

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) “பால் உற்பத்தி அபிவிருத்தி கடன் திட்டம்" தற்போது நடைமுறையில் உள்ளதா;

(ii) “1000 பாற் பண்ணைகளை அமைக்கும் வேலைத்திட்டத்தின்" கீழ் இன்றளவில் அமைக்கப்பட்டுள்ள பாற்பண்ணைகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி பாற்பண்ணைகளிலிருந்து வருடாந்தம் உற்பத்தி செய்யப்படும் திரவப் பாலின் அளவு யாது;

(iv) இதன் கீழ் எதிர்காலத்தில் அமைக்கப்படவுள்ள பாற் பண்ணைகளின் எண்ணிக்கை யாது;

(v) இந்த வேலைத்திட்டத்துக்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் தொடர்ச்சியாக வழங்கப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1127/2024

கௌரவ டீ. வீரசிங்க,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டதால் அலங்கார மீன் ஏற்றுமதியாளர்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகி இருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இலங்கையில் இருக்கின்ற அலங்கார மீன் ஏற்றுமதியாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை அலங்கார மீன் ஏற்றுமதி மூலம் ஈட்டப்பட்ட வருமானம் ஒவ்வோராண்டு வாரியாக தனித் தனியாக யாது என்பதையும்;

(iv) அலங்கார மீன் வளர்ப்புத் தொழிற்றுறையை பாதுகாக்க நடைமுறைப்படுத்தியுள்ள வேலைத்திட்டம் யாது என்பதையும்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1154/2024

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தொல்பொருள் அகழ்வுகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி இடங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அகழ்வு /அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் தொடர்ச்சியாக வழங்கப்படுகின்றனவா என்பதையும்;

(iv) தேவையான நிதி ஏற்பாடுகள் கிடைக்காமை காரணமாக தற்போது அகழ்வு/ அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ள தொல்பொருளியல் இடங்கள் யாவை என்பதையும்;

(v) எதிர்காலத்தில் அகழ்வு /அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள தொல்பொருளியல் இடங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2024 யூன் 20, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1248/2024

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுக்கு அமைவாகத் தனியார் துறை ஊழியர்களின் வேதனங்களை அதிகரிப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும்;

(ii) அவ்வாறான நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படாமல் இருந்தால் அதற்கான காரணங்களையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியின் போது பெண் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு எடுக்கப்பட்ட விசேட நடவடிக்கைகளையும்;

(ii) தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு ஈடுகொடுக்குமுகமாகப் பெண்கள் தொழிற்படையில் இணைவதற்கான எத்தனிப்புக் காணப்படுவதால், பிள்ளைப் பராமரிப்பு, போஷாக்கு மற்றும் அவை போன்ற உதவியினைப் பெண் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு வழங்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும்;

(iii) கடல் கடந்த நாடுகளில் வீட்டுப் பணிப்பெண்களாகத் தொழில்புரியும் பெண் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும்;

(iv) அவ்வாறான நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படாமல் இருந்தால் அதற்கான காரணங்களையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1252/2024

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உலகத்திலுள்ள பெரும்பாலான நாடுகளால் இன்றளவில், தனியார் மருத்துவக் கல்வி ஊக்குவிக்கப்படுவதை அறிவாரா என்பதையும்;

(ii) இலங்கையில் மேற்கத்திய மருத்துவக் கல்வியை வழங்கும் தனியார் மருத்துவக் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) அந்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி தனியார் மருத்துவக் கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் மாணவர் களுக்குத் தேவையான மருத்துவ பயிற்சியைப் பெறுவதற்காக உள்ள அரசாங்க போதனா வைத்தியசாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(vi) இலங்கையில் தனியார் மேற்கத்திய மருத்துவ கல்வியை விருத்தி செய்யவும் ஊக்குவிக்கவும் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1283/2024

கௌரவ அசங்க நவரத்ன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தின் அரசாங்க வைத்தியசாலைகளில் இன்றளவில் காணப்படும் மனித வள மற்றும் பௌதீக வள குறைபாடுகள் தொடர்பில் முழுமையான அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பாரா என்பதையும் ;

(ii) மேற்படி குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அதன் பொருட்டு இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1286/2024

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) 2018 ஆம் ஆண்டு முதல் இதுவரை மேற்படி ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனத்தினதும் வருடாந்த வருமானம் மற்றும் செலவினம் தனித்தனியே யாதென்பதையும்;

(iv) பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு மத்தியில் நிதி மற்றும் பௌதீக வளங்கள் குறைந்த உள்ளூராட்சி நிறுவனங்களைக் கட்டியெழுப்புவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1701/2024

கௌரவ எஸ்.எம்.மரிக்கார்,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீடுகளில் நிகழும் இயற்கை மரணங்களைப் பதிவு செய்கையில், மரணம் நிகழும் பிரிவின் கிராம உத்தியோகத்தர் மற்றும் பதிவாளரது பணிப் பொறுப்புகள் வெவ்வேறாக யாவை;

(ii) இயற்கை மரணமொன்றின்போது, மரணமடைந்த நபரின் மரணத்துக்கான காரணத்தை உறுதிப்படுத்தும் சட்டரீதியான முறையியல் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1703/2024

கௌரவ கே.பீ.எஸ். குமாரசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அரச பாடசாலைகளில் கடமையாற்றும் கல்விசாரா ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவர்களின் பதவிப் பெயர்கள் யாவை;

(iii) திட்டவட்டமான கடமைப் பட்டியல் மூலம் அவர்களுக்கு கடமைகள் பொறுப்பளிக்கப்பட்டுள்ளனவா;

(iv) மேற்படி ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதற்கான நடவடிக்கை முறையொன்று உள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஊழியர்களில் தற்போது பட்டப் படிப்பை பூர்த்தி செய்துள்ள ஊழியர்கள் தொடர்பில் மேற்கொள்ளும் நடவடிக்கை யாது;

(ii) பட்டம் மற்றும் அனுபவம் என்பவற்றைக் கவனத்தில் கொண்டு அவர்களை ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1728/2024

கௌரவ ஜகத் பிரியங்கர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்திலுள்ள கல்விக் கோட்டங்களின் எண்ணிக்கை எத்தனை;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு கல்விக் கோட்டங்களிலுமுள்ள தேசிய பாடசாலைகளினதும் மாகாண சபை பாடசாலைகளினதும் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் வெவ்வேறாக யாவை;

(iv) மேற்படி ஒவ்வொரு கல்விக் கோட்டங்களிலும் காணப்படுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பாடத்தின் அடிப்படையில் வெவ்வேறாக யாது;

(v) மேற்படி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1738/2024

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள காணிகள் அண்மைக்காலமாக அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டு வருகின்றன என்பதையும்;

(ii) இலங்கை நில அளவைத் திணைக்களம் திருகோணமலை மாவட்டத்தின் இறக்கக்கண்டி, புல்மோட்டை, கிண்ணியா, மூதூர் மற்றும் தோப்பூர் ஆகிய பிரதேசங்களிலுள்ள காணிகளை அவற்றின் உரிமையாளர்களின் அனுமதியின்றி அளவீடு செய்து வருகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான காரணம் யாதென்பதையும்;

(ii) மேற்கூறப்பட்ட வகையில் காணிகளைச் சுவீகரிப்பதானது அக்காணிகளில் பரம்பரை பரம்பரையாக விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற விவசாயிகளின் சீவனோபாயத்திற்குப் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பதனை அறிவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1750/2024

கௌரவ இஷாக் ரஹுமான்,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி மின் உற்பத்தி நிலையத்தினை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி மின் உற்பத்தி நிலையத்திலிருந்து தேசிய மின் கட்டமைப்புடன் இணைப்பதற்கு எதிர்பார்க்கப்படும் மின்சாரத்தின் அளவு மெகா வொட்களில் எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி மின் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1877/2024

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொரகஹகந்த கருத்திட்டத்தினால் மாத்தளை மாவட்டத்தில் மேற்படி கருத்திட்டத்தை அண்டியதாக அமைந்துள்ள பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் காட்டு யானைகளின் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி கிராமங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அக் கிராமங்களில் வசிக்கின்ற, இன்றளவில் காட்டு யானைகளின் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு கிராமம் வாரியாக வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி காட்டு யானைகளின் அச்சுறுத்தலுக்கு தீர்வு காண்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?